நீங்கள் செல்லும் ஒவ்வொரு இடத்திலும்,
ஒவ்வொரு முறையும்
உங்களுடைய வருகையைப் பதிவுசெய்யுங்கள்

# உங்களுடைய 'கோவிட்-பாதுகாப்பு திட்டம்'

## 1. 'கோவிட்-பாதுகாப்பு திட்டம்' ஒன்று உங்களிடம் இருக்கிறதா?

வேலைத்தல செயல்பாடுகளை மேற்கொள்ளும் ஒவ்வொரு வர்த்தகமும் 'கோவிட்-பாதுகாப்பு திட்டம்' ஒன்றைக் கொண்டிருக்கவேண்டும். 'வொர்க்-சேஃப்' அதிகாரிகளும், அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அலுவலர்களும் விக்டோரிய மாநிலம் முழுதும் வேலைத்தலங்களுக்குச் சென்று திடீர்-நேரடிச் சோதனைகளை மேற்கொண்டுவருகிறார்கள்.

## 2. உங்களுடைய வர்த்தகத் துறைக்கான 'கோவிட்-பாதுகாப்பு' நடைமுறைகள் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா?

**coronavirus.vic.gov.au/guidance-sectors** எனும் வலைத்தலப் பக்கத்தில் ஒவ்வொரு வர்த்தகத் துறைக்குமான வழிகாட்டல்கள் கிடைக்கும். ஒவ்வொரு வர்த்தகத் துறைக்குமான வழிகாட்டல் பக்கத்திலும் 'அடிக்கடி கேட்கப்படுக் கேள்விக'ளுக்கானஆலோசனைகளும், பதில்களும் உள்ளன.

## 3. உங்களுடைய வர்த்தகத்தினை 'கோவிட்-பாதுகாப்பு' உள்ளதாக ஆக்குவதற்கு நீங்கள் என்ன செய்துள்ளீர்கள்?

முகக் கவசங்கள் போன்ற சரீரப் பாதுகாப்பு சாதனங்களைத் தொழிலாளர்களுக்குக் கொடுப்பது, உங்களுடைய வர்த்தக வளாகத்திற்குள் நுழையும் அனைவரையும் அவர்களுடைய வருகையைப் பதிவு செய்யுமாறு ஊக்குவிப்பது, கைச்சுத்திகரிப்பான் கிடைக்குமாறு செய்வது மற்றும் அடிக்கடி கைபடும் பகுதிகளைக் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்வது ஆகியன இந்த நடவடிக்கைகளில் உள்ளடங்கலாம்.

## 4. உங்களுடைய 'கோவிட்-பாதுகாப்பு' திட்டத்தினை அவ்வப்போது புதுப்பிக்கவேண்டிய பொறுப்பு யாருடையது?

புதிய கட்டுப்பாடுகளுக்கு நீங்கள் உடன்படவும், உங்களுடைய தொழிலாளர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான தேவைப்பாடுகளை நீங்கள் பூர்த்தி செய்யவும் உங்களுக்கு உதவும் வகையில் உங்களுடைய 'கோவிட்-பாதுகாப்பு திட்டம்' அடிக்கடி மீள்பார்வையிடப்பட்டு புதுப்பிக்கப்படவேண்டும்.

## 5. உங்களுடைய 'கோவிட்-பாதுகாப்பு திட்டம்' என்ன என்பது உங்களுடைய தொழிலாளர்களுக்குத் தெரியுமா?

உங்களுடைய 'கோவிட்-பாதுகாப்பு திட்டம்' என்ன என்பதும், நீங்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதும் உங்களுடைய தொழிலாளர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டியது முக்கியம். அவர்கள் பாதுகாப்பாக இருக்கவேண்டியது உங்களுடைய வர்த்தகத்திற்கு முக்கியம் என்பதையும், அவர்களுக்கு உடல் நலம் சரியில்லை என்றால் வீட்டில் அவர்கள் வீட்டில் இருக்கவேண்டியதன் அவசியத்தையும் அவர்கள் விளங்கிக்கொள்ள இது அவர்களுக்கு உதவும். காய்ச்சல், குளிர்க்காய்ச்சல்கள், இருமல், தொண்டை நோவு, மூச்சுத் திணறல், நீர் வடியும் நாசி அல்லது வாசனைத் திறன் இழப்பு ஆகியன 'கோவிட்-19' நோயின் அறிகுறிகளில் உள்ளடங்கும்.

## 6. உங்களுக்கான 'க்யூ.ஆர். குறியீடு' (QR Code) உங்களிடம் இருக்கிறதா?

அனைத்து வர்த்தகங்களும் விக்டோரிய மாநில அரசின் 'க்யூ.ஆர். குறியீட்டு சேவை'யைக் கட்டாயமாகப் பயன்படுத்தியாக வேண்டும் (மட்டுப்படுத்தப்பட்ட சில விதிவிலக்குகள் உள்ளன), மற்றும் வாடிக்கையாளர்களும், பணியாளர்களும் - அவர்கள் வர்த்தக வளாகத்தில் இருக்கும் நேரம் எவ்வளவாக இருந்தாலும் - எல்லா இடங்களிலும், ஒவ்வொரு முறையும் அவர்களுடைய வருகையைப் பதிவு செய்வதை உறுதிப்படுத்தவேண்டும். இது இலவசம், பயன்படுத்த எளிதானது மற்றும் 'கோவிட்-19'-இன் பரவலை நிறுத்த இது உதவும். பதிவு செய்வதற்கு coronavirus.vic.gov.au/QRcode எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.

## 7. செய்யவேண்டிய காரியங்களை வாடிக்கையாளர்கள் சரியாகச் செய்வதில் அவர்களுக்கு உதவ இன்னும் கூடுதலான அடையாளக்-குறிகளும், சுவரொட்டிகளும் உங்களுக்குத் தேவையா?

**coronavirus.vic.gov.au/signs-posters-and-templates** எனும் வலைத்தலப் பக்கத்தில் உங்களுடைய வர்த்தகத் துறைக்கானக் குறியீடுகள், சுவரொட்டிகள் மற்றும் ஒட்டுத்தாள்கள் ஆகியன கிடைக்கும்.

## 8. வேறொரு மொழியில் உங்களுக்குத் தகவல்கள் தேவையா?

13 22 15 எனும் இலக்கத்தில் 'விக்டோரிய வர்த்தக அவசர உதவி-இணைப்'பினை அழைத்தும், coronavirus.vic.gov.au/translated-information-about-coronavirus-covid-19 எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் சென்றும் வர்த்தகங்களுக்கான 'கோவிட்-பாதுகாப்பு' திட்டமிடல் பற்றிய பல்வேறு மொழிகளிலுள்ள தகவல்களைப் பெறலாம்.

**www.coronavirus.vic.gov.au/vaccine எனும் வலைத்தலப் பக்கத்தில் உங்களுடைய 'கோவிட்-19' தடுப்பூசியை இட்டுக்கொள்வதற்கான முன்பதிவினைச் செய்துகொள்ளுங்கள்.**

VICTORIA State Government

## உங்களுடைய தொழிலாளர்களையும், வாடிக்கையாளர்களையும் நீங்கள் இவ்விதமாகத்தான் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| வர்த்தகத்தின் பெயர்: | | | |
| விலாசம்: | | | |
| திட்டத்தினைப் பூர்த்தி செய்தவர்: | | செய்யும் வேலையின் பெயர்: | |
| மீள்பார்வையிடப்பட்ட திகதி: | | அடுத்த மீளாய்வு: | |

## உடல்ரீதி விலகலைப் பின்பற்றுங்கள்

| தேவைப்பாடுகள் மற்றும் சிபாரிசுகள் | நடவடிக்கைகள் |
|---|---|
| உங்களுக்குப் பொருந்தும் 'ஆள்-அடர்த்திக் குறியீ'ட்டினை நீங்கள் கட்டாயமகப் பின்பற்றவேண்டும். வேலைத்தலத்திலுள்ள ஒவ்வொரு பகுதியிலும் பாதுகாப்பான முறையில் எத்தனை பேர் இருக்க இயலும் என்று தெரிந்துகொள்ள உங்களுடைய தொழில் துறைக்கான வழிகாட்டல்களைப் பாருங்கள். உதாரணமாக, 30 சதுர மீட்டர் பரப்பளவுள்ள கடை ஒன்று உங்களுக்கு இருந்தால், 'ஒரு ஆளுக்கு இரண்டு சதுர மீட்டர்' என்ற விதிமுறைப்படி உங்கள் கடையில் 15 பேர் இருக்கலாம். | உங்களுடைய வர்த்த்தகத் துறைக்கான 'ஆள்-அடர்த்திக் குறியீடு' என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா?<br><br>'ஆள்-அடர்த்திக் குறியீடு' குறித்த விதிமுறையைப் பின்பற்றுவதற்காக நீங்கள் என்ன செய்துவருகிறீர்கள்?<br><br>உங்களுடைய வர்த்தகத்தின் வாயில் பகுதியில் அடையாளக் குறி ஒன்றை நிறுவியிருக்கிறீர்களா?<br><br>உங்களுடைய 'ஆள்-அடர்த்திக் குறியீ'ட்டினை நீங்கள் எஞ்சாமல் இருக்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்தவேண்டிய பொறுப்பு யாருடையது? |
| இயலுமான தருணங்களில், தொழிலாளர்களும், தலத்திற்குள் வருபவர்களும் 1.5 மீட்டர் இடைவெளி விட்டு உடல்ரீதி விலகலைப் பின்பற்ற இயலவேண்டும் என்பதை இலக்காகக் கொள்ளுங்கள். | உங்களுடைய வேலைத்தலத்திற்குள் ஆட்கள் நுழையும்பொழுதும், தலத்திற்குள்ளாக ஆட்கள் நடமாடும் பொழுதும், அங்கிருந்து அவர்கள் வெளியேறும்பொழுதும் ஆள் நெரிசலைக் குறைக்கவேண்டிய தேவை உங்களுக்கு இருக்கிறதா?<br><br>1.5 மீட்டர் தூர இடைவெளி விட்டு மற்றவர்களிடமிருந்து விலகியிருக்குமாறு ஆட்களை ஊக்குவிப்பதற்காக தரை-அடையாளக்-குறிகள் அல்லது ஒட்டு-அடையாளக் குறிகளை நீங்கள் பயன்படுத்திவருகிறீர்களா? |
| உடல்ரீதி விலகல் குறித்த பயிற்சியை நீங்கள் தொழிலாளர்களுக்கு அளிக்கவேண்டும். தற்போதைய 'கோவிட்-பாதுகாப்பு' குறித்த நிலைப்பாடுகள் இதில் உள்ளடங்கியிருக்க வேண்டும்.<br><br>**coronavirus.vic.gov.au** எனும் வலைத்தலப் பக்கத்தில்இவற்றைக் காணலாம். | உடல்ரீதி விலகலின் முக்கியத்துவத்தினை உங்களுடைய தொழிலாளர்கள் விளங்கிக்கொண்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக நீங்கள் என்ன செய்துள்ளீர்கள்? |

## முகக் கவசம் ஒன்றை அணியுங்கள்

| தேவைப்பாடுகள் மற்றும் சிபாரிசுகள் | நடவடிக்கைகள் |
|---|---|
| **coronavirus.vic.gov.au/face-masks** எனும் வலைத்தலப் பக்கத்தில் சொல்லப்பட்டுள்ளதைப் போல, தற்போதைய முகக் கவசத் தேவைப்பாடுகளை உங்களுடைய தொழிலளர்கள் பின்பற்றுகிறார்கள் என்பதை நீங்கள் உறுதிப்படுத்தவேண்டியது **கட்டாயமாகும்**.<br><br>தேவைப்பாடுகள் காலப்போகில் மாறலாம். | உங்களுடைய தொழில்-துறைக்கான முகக் கவசத் தேவைப்பாடுகள் என்ன என்பதை உங்களுடைய தொழிலாளர்கள் விளங்கிக்கொண்டுள்ளார்களா?<br><br>உங்களுடைய தொழிலாளர்களுக்கு நீங்கள் முகக் கவசங்களைக் கொடுத்துவருகிறீர்களா? |

| | |
|---|---|
| சரீரப் பாதுகாப்பு சாதனங்களை சரியாகப் பொருத்துவது, அவற்றைப் பயன்படுத்துவது, மற்றும் அவற்றை அப்புறப்படுத்துவது எப்படி என்பதைப் பற்றிய பயிற்சியையும் தகவல்களையும் நீங்கள் அளிக்கவேண்டும்.<br><br>மீண்டும் பயன்படுத்தக்கூடிய முகக் கவசங்களைப் பயன்படுத்திய பிறகு அவற்றை தினமும் கழுவவேண்டும் என்று உங்களுடைய தொழிலாளர்களுக்கு நீங்கள் தெரிவிக்கவேண்டும். இருந்தாலும், பகல் வேளையில் முகக் கவசம் கண்ணுக்குத் தெரியும் விற்கு அழுக்காகியோ, ஈரமாகியோ இருந்தால், உடனடியாக அதை அகற்றிவிட்டு சுத்தமான முகக் கவசம் ஒன்றை அணியவேண்டும். | சரீரப் பாதுகாப்பு சாதனங்களை எப்படிப் பயன்படுத்துவது என்பதை உங்களுடைய தொழிலாளர்கள் விளாங்கிக்கொண்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்தவேண்டிய பொறுப்பு யாருடையது? |

## நல்ல சுகாதாரப் பழக்கங்களைப் பின்பற்றுங்கள்

| தேவைப்பாடுகள் மற்றும் சிபாரிசுகள் | நடவடிக்கைகள் |
|---|---|
| மற்றவர்களுடன் அடிக்கடி பகிர்ந்துகொள்ளும் பகுதிகளைக் கிருமி நாசினியைக் கொண்டு சுத்தம் செய்ய நீங்கள் **அவசியம்** முயற்சிக்கவேண்டும். கதவின் கைப்பிடிகள், தொலைபேசிகள் போன்ற அடிக்கடி கைபடும் பகுதிகள் இதில் உள்ளடங்கும்.<br><br>நீங்கள் செய்யவேண்டியன:<br>• சோப்பு மற்றும் கிருமிநாசினி ஆகியவற்றை உள்ளடக்கிய தகுந்த சுத்திகரிப்புப் பொருட்களைப் பயன்படுத்தி அடிக்கடி கைபடும் பகுதிகளை சுத்தம் செய்யவேண்டும்.<br>• வேலைத்தலத்தில் வேலை-நேர-சுழற்சி(shift)களுக்கு இடையே சுத்திகரிப்பை மேற்கொள்ள வேண்டும். | கதவின் கைப்பிடிகள், 'கவுண்ட்டர்'கள் மற்றும் கைப்பிடிக் கிராதிகள் அகியவற்றை உள்ளடக்கிய அடிக்கடிக் கைபடும் பகுதிகளைக் கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்கிறீர்களா?<br><br>வேலைத்தலத்தில் வேலை-நேர-சுழற்சி (shift) களுக்கு இடையே சுத்திகரிப்பை மேற்கொள்ளவேண்டிய பொறுப்பு யாருடையது? |
| அனைவராலும் பகிர்ந்துகொள்ளப்படும் பகுதிகளில் 'சுத்திகரிப்புப் பதிவேடு' (cleaning log) ஒன்றை நீங்கள் பார்வைக்கு வைக்கவேண்டும். | உங்களுடைய 'சுத்திகரிப்புப் பதிவேடு' (cleaning log) எங்கே வைக்கப்பட்டுள்ளது? |
| சோப்பு மற்றும் கைசுத்திகரிப்பான் ஆகியன அனைத்துத் தொழிலாளர்களுக்கும் கிடைக்குமாறு நீங்கள் செய்யவேண்டும், மற்றும் அவ்வப்போது தவறாமல் கைகளைக் கழுவுமாறு அவர்களை ஊக்குவிக்கவேண்டும். | கைகளைக் கழுவதற்கான அனைத்து இடங்களிலும் சோப்பு மற்றும் கைச்சுத்திகரிப்பான் ஆகியன இருக்கின்றனவா?<br><br>வாடிக்கையாளர்கள், பொருட்களைக் கொண்டுவந்து சேர்ப்பிப்பவர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகிய அனைவரும் இங்கு வந்துசேரும் பொழுது அவர்களால் கைச்சுத்திகரிப்பானை அணுகிப் பெற இயலுமா? |

## பணியாளர்கள் சுகவீனமாக இருந்தால், அது குறித்த பதிவுகளை வைத்திருங்கள், அத்துடன் துரிதமாகச் செயல்படுங்கள்

| தேவைப்பாடுகள் மற்றும் சிபாரிசுகள் | நடவடிக்கைகள் |
|---|---|
| உங்களுடைய தொழிலாளர்கள் சுகவீனமுற்றிருந்தால், அவர்களுக்கு இருக்கும் நோயறிகுறிகள் மிதமானவையாகவே இருந்தாலும், அவர்கள் நோயறிவுச் சோதனைகளை மேற்கொள்ளவும், வீட்டிலேயே தங்கியிருக்கவும் நீங்கள் அவர்களுக்கு ஆதரவுதவியாக **இருக்கவேண்டும்**. | 'கோவிட்-19'-இன் அறிகுறிகள் யாவை என்பதை நீங்கள் அறிவீர்களா?<br><br>தொழிலாளி ஒருவருக்கு நோயறிகுறிகள் இருந்தால், அவர் நோயறிவுச் சோதனையை மேற்கொள்ளவேண்டும் மற்றும் அவர் வீட்டிலேயே தங்கியிருக்கவேண்டும் என்பது அவருக்குத் தெரியுமா? |
| திடீர் நோய்-வெடிப்புகள் எதையும் கட்டுப்படுத்துவதற்காக எதிர்பாராத் தருணங்களுக்கான இடையேற்பாட்டு வர்த்தகத் திட்டம் ஒன்றை நீங்கள் **கட்டாயமாக** உருவாக்கிக்கொள்ளவேண்டும். இதில் உள்ளடங்குவன:<br>• தொழிலாளி ஒருவருக்கு நோய்த்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை, அல்லது வேலையில் இருக்கும்பொழுது நோய்த்தொற்று உள்ள ஒருவருடன் அவர் நெருங்கிய தொடர்பில் இருந்திருக்கிறார் என்பதை அவருக்குத் தெரிவிப்பதற்கான செயல்திட்டம் ஒன்று.<br>• நோய்த்தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஒருவர் வேலைத்தலத்தில் இருந்திருக்கிறார் என்றால், வேலைத்தலத்தினை (அல்லது அதன் ஒரு பகுதியினை) சுத்திகரிப்பு செய்வதற்கான செயல்திட்டம் ஒன்று.<br>• உங்களுடைய வேலைத்தலத்தில் 'கோவிட்-19' தொற்று உள்ள ஒருவர் இருந்தால், 13 23 60 எனும் இலக்கத்தின் மூலம் 'சுகாதாரம் மற்றும் வொர்க்-சேஃப் விக்டோரியா திணைக்கள'த்துடன் தொடர்புகொள்வதற்கான திட்டம் ஒன்று.<br>• உங்களுடைய வேலைத்தலத்தினை மூடுமாறு 'சுகாதாரத் திணைக்கள'த்தினால் உங்களுக்கு அறிவுறுத்தப்படும் தருணத்தில் அப்படிச் செய்வதற்கான திட்டம் ஒன்று.<br>• உங்களுடைய வேலைத்தலத்தினை மீண்டும் திறக்குமாறு 'சுகாதாரத் திணைக்கள'த்தினால் அங்கீகரிக்கப்பட்டவுடன் அப்படிச் செய்வதற்கான திட்டம் ஒன்று. | வேலைத்தலத்திற்கு வந்திருக்கும் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் அனைவரது இருப்பையும் நீங்கள் எவ்வாறு பதிவு செய்வீர்கள்?<br><br>உங்களுடைய பணியாளர்களுக்கும், உங்களுடைய விநியோகஸ்தர்களுக்கும் நோய்க்காப்புத் தடையில் இருக்கவேண்டிய, மற்றும் நோயறிவுச் சோதனைகளை மேற்கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டால், அவர்களுடன் நீங்கள் எவ்வாறு விரைவாகத் தொடர்புகொள்வீர்கள்?<br><br>உங்களுடைய வேலைத்தலத்தில் 'கோவிட்-19' தொற்று உள்ள ஒருவர் இருந்தால், 'சுகாதாரம் மற்றும் வொர்க்-சேஃப் விக்டோரியா திணைக்கள'த்துடன் தொலைபேசி மூலமாகத் தொடர்புகொள்வது யார்? |

| | |
|---|---|
| **அனைத்து வர்த்தகங்களும், 'சர்வீஸ் விக்டோரியா' எனும் செயலி மூலமாக, விக்டோரிய மாநில அரசின் 'க்யூ.ஆர். குறியீட்டு சேவை'யைக் கட்டாயமாகப் பயன்படுத்தியாக வேண்டும் (மட்டுப்படுத்தப்பட்ட சில விதிவிலக்குகள் உள்ளன).**<br><br>**வருகையாளர் ஒருவரால் அவரது வருகையைப் பதிவு செய்ய இயலவில்லை என்றால், அவர்களுடைய 'ஸ்மார்ட் ஃபோன்', 'டேப்ளெட்' அல்லது கணினியைப் பயன்படுத்தி அவர்களுடைய வருகையைப் பதிவுசெய்துகொள்ள 'சர்வீஸ் விக்டோரியா கியோஸ்க்' எனும் சேவை ('சர்வீஸ் விக்டோரியா' எனும் செயலி மூலமாக) உதவுகிறது.**<br><br>**இது இலவசமானது, விரைவானது மற்றும் பயன்படுத்த எளிதானது.** | **coronavirus.vic.gov.au/register-to-use-vic-gov-qr-code-service எனும் வலைத்தலப் பக்கத்தில் 'விக்ரிடோய அரசாங்க க்யூ-ஆர் குறியீட்டு சேவை' (Victorian Government QR Code Service)-க்காகப் பதிவு செய்துகொள்ளுங்கள்.**<br><br>**நோய்த்தொற்றின் திடீர்ப் பரவல்-வெடிப்பு ஒன்று ஏற்பட்டால், இந்த வைரஸ்-இன் பரவலை நிறுத்துவதற்காக தொற்று உள்ளவர்களுடன் தொடர்பில் இருந்திருப்பவர்களை விரைவாகவும், செயல்திறன் மிக்க வகையிலும் கண்டுபிடிக்க இது உதவும்.**<br><br>**பணியாளர்கள், ஒப்பந்ததாரர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் வருகையாளர்கள் ஆகிய அனைவரும் அவர்களுடைய வருகையைப் பதிவு செய்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துங்கள்.** |

## சுற்றி வளைத்து மூடப்பட்டுள்ள இடங்களில் மற்றவர்களுடனான தொடர்பாடல்களைத் தவிருங்கள்

| தேவைப்பாடுகள் மற்றும் சிபாரிசுகள் | நடவடிக்கைகள் |
|---|---|
| சுற்றி வளைத்து மூடப்பட்டுள்ள பகுதிகளில் தொழிலாளர்கள் செலவழிக்கும் நேரத்தினை நீங்கள் குறைக்கவேண்டும். பின் வரும் வழிகளில் நீங்கள் இதைச் செய்யலாம்:<br>• வெளிப்புற சூழல்களில் வேலை செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.<br>• வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்குதல், சந்திப்புகள், தேநீர்-அருந்து-அறைகள், மதிய-உணவு இடைவேளைகள் மற்றும் பூட்டுப்பெட்டி அறைகள் ஆகிய நடவடிக்கைகளைக் கூடிய வரை வெளிப்புறப் பகுதிகளுக்கு மாற்றுதல்.<br>• சன்னல்கள் மற்றும் கதவுகளைத் திறந்து வைப்பதன் மூலம் காற்றோட்டத்தினை அதிகப்படுத்துதல்.<br>• குளிர்சாதனங்களில் சுத்தமான புதுக் காற்றோட்டம் உகந்த நிலையில் இருக்குமாறு செய்தல். | கதவுகளையும் சன்னலகளையும் உங்களால் திறந்துவைக்க இயலுமா, அல்லது நடவடிக்கைகளை வெளிப்புறப் பகுதிகளுக்கு இடமாற்றம் செய்ய இயலுமா? |

## தொழிலாளர் குழுக்-குமிழ்கள் (Workforce bubbles)

| தேவைப்பாடுகள் மற்றும் சிபாரிசுகள் | நடவடிக்கைகள் |
|---|---|
| ஒரே வேலை-நேரத்தில் பணிபுரியும் தொழிலாளர்களை ஒரே வேலைத்தலப் பகுதியில் பணியமர்த்துவதைக் கருத்தில் கொள்ளுங்கள். இயலுமான தருணங்களில், வேலை நேர சுழற்சிகள் மாறும் பொழுது வெவ்வேறு நேரத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள் ஒருவரோடொருவர் கலப்பதைத் தவிர்க்க முயற்சி செய்யுங்கள். | தொழிலாளர்கள் தொடர்பாடல் கொள்ளும் நபர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் விதத்தில் அவர்களைத் தனித்தனிக் குழுக்களில் பிரித்து வைத்திருக்கிறீர்களா?<br><br>நோய்த்தொற்றின் திடீர்-வெடிப்பு ஒன்று ஏற்பட்டால், உங்களுடைய தொழிலாளர் அணிகள் அனைத்தின் ஊடாக அது பரவுவதை நீங்கள் எப்படி நிறுத்துவீர்கள்?<br><br>ஒவ்வொரு அணியினருக்கும் வெவ்வேறு நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளனவா? |

'கோவிட்-பாதுகாப்பு திட்டம்' ஒன்றை உருவாக்கிக்கொள்ள அனைத்து சிறு வர்த்தகங்களுக்கும் உதவுவதற்கான ஒரு வழிகாட்டியாகும் இந்த ஆவணம். உங்களுடைய தொழில்-துறைக்கான மிகச் சமீபத்திய தேவைப்பாடுகள் என்ன என்பதை நீங்கள் **CORONAVIRUS.vic.gov.au** எனும் வலைத்தலத்தில் பார்த்துத் தெரிந்துகொள்கிறீர்கள் என்பதைத் தயவுசெய்து உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

எமது தகவல் பாதுகாப்புக் கொள்கைகளின் பிரகாரம், உங்களால் கொடுக்கப்படும் எவ்வொரு தகவல்களும் அந்தரங்கமான முறையில், சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக மட்டுமே இருப்பில் வைக்கப்படும்.

எமது தகவல் பாதுகாப்புக் கொள்கைகளைப் பற்றிய தகவல்களுக்கு **icc@ecodev.vic.gov.au** எனும் விலாசத்திற்கு மின்னஞ்சல் அனுப்புங்கள், அல்லது 13 22 15 எனு இலக்கத்தில் 'விக்டோரிய வர்த்தக அவசர உதவி இணைப்'பினை அழையுங்கள்.

**நீங்கள் செல்லும் ஒவ்வொரு இடத்திலும்,**
**ஒவ்வொரு முறையும்**
**உங்களுடைய வருகையைப் பதிவுசெய்யுங்கள்**

உங்களுடைய 'கோவிட்-பாதுகாப்பு திட்டம்' குறித்த உதவிக்காக **CORONAVIRUS.vic.gov.au** எனும் வலைத்தலத்திற்குச் செல்லுங்கள், அல்லது **13 22 15** எனும் இலக்கத்தில் 'விக்டோரிய வர்த்தக அவசர உதவி இணைப்'பினை அழையுங்கள். மொழிபெயர்ப்பாளர்கள் கிடைப்பர்.

VICTORIA State Government

DJPR 13413